
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO

# உரிமை மீட்சியின் ரத்த ஓட்டம்



# உரிமை மீட்சியின் ரத்த ஓட்டம்!

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

முதல் பதிப்பு : ஜூலை 1984

## சமர்ப்பணம்

1983 - ஜூலை மாதம் கொழும்பு வெலிக்கடைச் சிறையில் சிங்கள இன வெறி ராணுவத்தின் மேற்பார்வையில் அடித்து படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளின் காலடிகளில் கண்களை ரத்தக் குள மாக்கிக் கொண்டு இந்நூலை சமர்ப் பிக்கிறோம்.

வெளியீடு : தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
பிரச்சாரப் பிரிவு.

# வெங்கொடுமைச் சாக்காடே வெலிக்கடை!

ஸ்ரீலங்காவின் நவ பாசிஸ அரசினால் கட்டவிழ்த்து விடப் பட்ட இனப்படுகொலைகளின் உச்சக்கட்டமே சிறைச்சாலையில் திட்டமிட்டு நடாத்திய பயங்கர படு கொலைகள் ஆகும். இப்படி யான செயற்கரிய செய்கையைச் செய்ததின் மூலம் பாசிஸ அரசு வரலாற்றிலேயே தனக்கென ஒரு இடத்தை நிலையாகப் பெற் றிருக்கிறது.

தமிழினத்தின் தேசிய விடுதலைக்கு சக்திமிக்க மக்கள் ஆயுதப் போராட்டத்தின் மூலம் தீர்வு பெறுவதற்கு புரட்சிகர இயக்க மொன்றை முதன் முதலாக அமைத்த தோழர் தங்கத்துரையை யும், ஏனைய ஈழ விடுதலைப் போராளிகளையும் 1983ஆம் ஆண்டு யூலை மாதம் நவ பாசிஸ ஸ்ரீலங்கா அரசின் கொலைக் கூடமான வெலிக்கடைச் சிறையில் பூட்டப்பட்ட அறையில் கோரத்தனமாக கொலை செய்யப்பட்டது பேரினவாத அரசின் கோழைத் தனத்தையே எடுத்துக் காட்டுகிறது. இக்கோரக் கொலைச் சம்பவம் சிங்கள இனவாத படுகொலையின் மற்றொரு மைல் கல்லாகும்.

### குட்டிமணியின் வீர உரை

புத்த பெருமான் போதித்த அன்பு, கருணை, கொல்லாமைக் கோட்பாடுகளுக்கு விரோதமான செயல் உலகில் எந்த ஒரு சிங்களவனுக்கும் நாகரிகமான பெயரை எடுத்துத்தராது என்பது தெளிவாகும். இக்கோரக் கொலைச் செயலை செய்து முடித்த ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு வரும் வெட்கித் தலை குனிய வேண்டும். இவ் அரசின் ஒவ்வொரு அடக்கு முறைத் தன்மையும் தமிழீழ மக்களின் தாயகத்திற்கான

போராட்டத்திற்கு சர்வதேச ரீதியில் மேலும் கூடுதலான ஆதரவைத் தந்துள்ளதுடன் தமிழீழத்தை வென்றெடுக்கப் போராடும் ஈழ விடுதலைப் போராளிகள் மத்தியில் புதிய முற்போக்கான உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதையே தீர்க்க தரிசனம் மிக்க செயலதிபர், பாசிஸ அரசால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் "என்னை தூக்கிவிடுவதன் மூலம் தமிழீழ போராட்டத்திற்கு புதியதோர் உத்வேகத்தை அளித்துள்ளீர்கள். என்னைத் தூக்கிலிடலாம். ஆனால் ஆயிரமாயிரம் குட்டிமணிகள் தோன்றுவார்கள். அவர்கள் என்னைப் போல் அப்பாவியாக இருக்க மாட்டார்கள். மாறாக வீரச்செயல் செறிந்த உயிரைக் கொடுக்கும் போராளிகளாகவே இருப்பார்கள்" என்று கூறினார்.

## சிங்கள அரசின் சதி!

ஸ்ரீலங்கா அரசின் கொலைக் கூடத்தில் நடந்த சம்பவத்தினால் ஏற்பட்ட கறையைப் போக்க "சிறைச்சாலையில் இருந்த சிங்கள கைதிகள் சுயமாக ஏற்பட்ட உணர்ச்சி வெடிப்பு காரணமாக தமிழ் கைதிகளை கொலை செய்தனர்" என்று பாசிஸ அரசு உலக அரங்கிற்கு வெளியிட பகீரதப் பிரயத்தனம் செய்து வந்தாலும் இக்கோரக் கொலைகள் ஸ்ரீலங்கா உயர் மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டு சிறை அதிகாரிகள், சிறைக்கைதிகள், ஆயுதப் படையினர் போன்றோரின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்ட திட்டம் என்பது உலக மக்கள் அறிந்த உண்மை.

எமது இயக்கத்தின் குரல்வளைகள் தோழர்கள் குட்டிமணி, ஜெகன் ஆகியோருக்கு மரண தண்டனை கிடைத்த வேளையில் அவர்கள் இருவரும் தங்களது கண்களை கண் பார்வை அற்ற தமிழர்களுக்கு அளிக்கும் படியும், அதன் மூலம் மலரவிருக்கும் ஈழத்தை பார்க்கமுடியும் என்றும் உருக்கமான பொருள் நிறைந்த வேண்டுகோளை நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள், இதே காரணத்திற்காக இன வெறியர்களின் தாக்குதலுக்கு உள்ளாகி




ஏற்கெனவே பாதிப்புற்றிருந்த தோழர் குட்டிமணி குற்றுயிருடன் இழுத்து வரப்பட்டு, சிறைச்சாலையின் மத்தியில் போடப்பட்டார், சிங்கள வெறியர் விசிலடித்து ஆர்ப்பரித்து "ஜெயவேவா" கோஷம் எழுப்பி தோழர் குட்டிமணியின் கண்கள் இரண்டையும் கூரிய ஆயுதம் ஒன்றினால் தோண்டி எடுத்தனர். செயலதிபர் குட்டிமணியின் கண்கள் தோண்டி எடுக்கப்பட்டதும் சிங்கள கைதிகள் கை தட்டி விசிலடித்து வெறியுணர்ச்சி பொங்க ஆர்ப்பரித்தனர். அதே வேளை தோழர் குட்டிமணியின் கண்களைத் தோண்டிய இனவெறியன் ஏனைய சிங்கள கைதிகளினால் தோளில் தூக்கப்பட்டுச் சிங்கள வீரனாகக் கொண்டாடப்பட்டான். ஏனைய கைதிகள் குட்டிமணியின் உடலை மேலும் குத்திக் கிழித்து அவரின் ஆணுடம்பையும் வெட்டினார்கள். இறுதியாக 15 வெறியர்கள் தோழர் குட்டிமணியின் குருதியை குடித்தனர்.

## புத்தரை அவமதித்த சிங்கள இனவெறி!

பின்னர் சிங்கள இன வெறியர் அங்கு அமைக்கப்பட்டிருந்த புத்த விகாரையின் புத்தர் சிலை முன் தோழர் குட்டிமணியின் உடலை நிர்வாணமாக போட்டார்கள். இவ்வாறாக தோழர் ஜெகனின் கண்களும் தோண்டப்பட்டு, ஆணுடம்பு வெட்டப்பட்டு அவரின் உடலும் நிர்வாணமாகப் புத்தர் சிலையின் முன்னால் வீசப்பட்டது. காட்டுமிராண்டித்தனமான கூச்சலுக்கு மத்தியில் ஏனைய தமிழ் இளைஞர்களும் சித்திரவதை செய்து கொல்லப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டு புத்தரின் காலடியில் எறியப்பட்டனர். சிங்கள பௌத்த வெறியர்கள் தமிழிளைஞர்களின் தலைகள், கண்கள், கால்கள், கைகள், உடல்கள், குருதி யாவற்றையும் புத்தருக்கு காணிக்கையாக அளித்தனர்.

சிறைச்சாலை வாகனத்தில் ஈழத்தேச இளைஞர்களின் உடல்கள் முழு நிர்வாணமாக போடப்பட்டன. அந்த உடல்களின் மத்தியில் உயிர்ப்பிரிவின் முனகல் ஒலி கேட்ட போது




கொலை வெறியர்கள் பொல்லால் அடித்தும் கம்பியால் குத்தியும் அவ்வொலியை நிரந்தரமாக நிறுத்தினர்கள்.

வெலிக்கடையில் இவ்வினப் படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது ஹெலிகாப்டர் ஒன்று வெலிக்கடைச் சிறையின் மேல் தாழப் பறந்து கொண்டிருந்தது. இது வெலிக் கடைச் சிறைச்சாலைக் கொலைக்கும், அரசாங்க உயர் மட்டத் திற்கு இருந்த தொடர்பை உறுதிப்படுத்தியது.

இப்படியான தொடர்ச்சியான கொலைகள் மூலம் தமிழீழ போராட்டத்தை அடக்கி, ஒடுக்கி விடலாம் என்று இனவாத அரசு கனவு காணுமேயானால் அது பகற் கனவாகவே இருக்கும், இன்றும் தனது கொள்கையை சிறிதும் தளர விடாமல் தமிழ் பேசும் மக்களை படுகொலை செய்து வருகிறது. இது அவர்களின் அதிகார வெறி பிடித்த ஆட்சி அஸ்தமிக்க போகிறது என்பதையே காட்டுகிறது.

# எங்கள் கைவிளக்கு
## செயலதிபர் குட்டிமணி



எமக்கென ஒரு கட்சி புரட்சிக்கு வழி காட்டி
அமைத்திட முன் வந்த அறிவின் முதல் வரி
அடிமை விலங்கொடிக்க உயிர் பெற்ற சம்மட்டி
தோதான ஈழத்தின் உள்ளுடன் இவன் கட்சி
கொள்கையில் பிடிதளரா குணமே இவன் சொத்து
மாசிப் பனிக் குளிரில் ஏற்றிவைத்த மெழுகுவர்த்தி
மங்காத பாட்டாளி மாட்சிக்கு வழி காட்டி
கோடை தாங்க வந்த குளிர் மிக்க தடாகமன்றே
பாடையில் அவன் போனல் பதைக்காதோ ஏழை மனம்

புறம்பாக பல கதைகள் பேசி எமை ஆட்கொள்ள
புற்றீசல் முளைப்பதுபோல் முகவர்கள் முளைத்திடுவர்
தயங்காத வழி செல்வோம் வர்க்கம் எனும் உணர்வோடு
தகர்த்திடுவோம் முதலாளி வர்க்கத்தை அடியோடு
எடுத்திடுவோம் தமிழ் ஈழம் - அதில் எங்கணும் புரட்சி மணம்
என்றெனவே எண்ணியவன் எமக்காக உழைத்திட்டான்
சித்திரை வெய்யிலே தமிழ் ஈழம் காய்கையிலே
பூத்திடவே ஒரு தோட்டம் பொதுமைக் கருவூலம்
பாய்ச்சிடுவேன் உதிரத்தை அதில் பரிணமிக்கும் விடுதலைப்பூ
பறித்திடடா என் தம்பி என் காவியப் பெருந்தலைவா
என்றெனவே எண்ணியவன் எமக்காக மடிந்திட்டான்.
நடை பாதை வழியெல்லாம் முட்புதர்கள் கிடக்கையிலே
உடற் தோலை உரிந்து வந்த கம்பளம் போட்டவனே
தமிழ் தாயின் கூந்தலிலே இணை மலர்கள் இல்லையென்றே
நின் கண்மலர்கள் தந்த நீ காவியம் படைத்திட்டாய்
திரண்டு வரும் எல்சவடோர் விடுதலைக்கு ஓர் உங்கோ?!
தம்பிய மக்களை வழி நடத்த "நுஜாமோ,"!
நாசத்தின் வேராறுக்க புறப்பட்டான் "யும்பிளாட்"!!
அராபிய மக்களின் இரட்சகனாய் "கடாபி"!,
அடிமை இருளில் எம் கைவிளக்கே 'குட்டிமணி'!!

-எண்ணம் (ஜெர்மன்)

1-10-88

# புரட்சிக் களத்தில் பூத்த மலர்கள்

விடுதலைப் போரிலே களமாடி வீரமரணம் எய்த, விடுதலை வேட்கை கொண்டு புறப்பட்ட எமது இயக்கத்தை முன்னெடுத்து வளர்த்த வீரமறவர்கள்; கடந்த இருள் படர்ந்த 83ம் ஆண்டின் ஜூலை மாத 25ம் நாள் சிறீலங்கா இனவெறி அரசின் கொலைக்களச் சதித்திட்டத்தினால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர்.

இந்நாள் தமிழினத்திற்கே ஓர் துக்க தினமாகும் அவர்களின் வழிவந்த நாங்கள், அவர்களின் கொள்கை வழிச் சென்று, மறவர்கள் கொண்ட இலட்சியக் கனவினை விரைவில் நனவாக்கப் போகின்றோம் என சபதம் எடுத்துள்ளோம்.

## மரணத்தின் நிழலில்

## வீரமறவன் தங்கத்துரை!

எமது தோழர்கள் வீரமரணமடைந்து ஓராண்டு பூர்த்தியாகும் இக்கால கட்டத்தில்; கொள்கைகளை சூளுரைத்து, தமிழ் மக்களின் உள்ளங்களிலே துல்லியமாக ஒளிவீசிக் கொண்

டிருக்கும் துருவ நட்சத்திரங்களாக மீண்டும் துயரத்தின் விளிம்பில் நின்று நினைவு கூறுகின்றோம்

தமிழீழ விடுதலை இயக்கத்தினை தளிர் விட்டோங்கச் செய்த தனிப்பெரும் தத்துவார்த்தத் தலைவன் தங்கத்துரை கதிகலங்கச் செய்த ஒப்பற்ற வீரனிவன்.

சிறீலங்கா பாசிச நீதிமன்றத்தில், மரண நிழலில் நின்று, 'நாம் வன்முறை மீது காதல் கொண்ட மனநோயாளிகள் அல்லர்'' என்ற தனது தத்துவக் கூற்றை உலக வரலாற்று ஏடுகளிலே பொறித்திட்ட புரட்சிச் சரித்திர நாயகனும், அமைதியும் அடக்கமும், அன்பும், பண்பும் உறுதியும், அணிகலன்களாக அமையப் பெற்று, சிங்கத் தமிழ் இளைஞர்களுக்கெல்லாம் "தங்கண்ணு" ஆயினர் (ன்)

## கொள்கைக் குன்றம்

கொள்கையில் இமயக்குன்றமாய்; தலைவன் கூறிய புரட்சித் தத்துவங்களை எல்லாம் செயலிலே சித்தரித்தார் செயலதிபர் தோழர் குட்டிமணி. சிறீலங்கா அரசின் இராணுவத்தின சிம்ம சொப்பனமாய் அவர்களைக் கிலி கொண்டு திக்குமுக்காடவைத்த திடம் கொண்ட தீரன் இவன். இருகரமதிலும் இயந்திரத் துப்பாக்கி ஏந்தி இலக்குத் தவறுது விசை வில் அழுததும் விறலோன்!

நீதிமன்றக் கூண்டிலே நின்று தூக்கிலே தொங்கிய பின் என் கண்களை விழியற்ற தமிழ் மகனுக்கு வழங்குங்கள். அந்தக் கண்கள் மூலம் மலரப்போகும் தங்கத் தமிழீழத்தை, தரிசிக்க ஆசைப்படுகிறேன் என்று சிறிய சிங்கக் ''குட்டி''; கண் கொடுக்க எண்ணியதால் கண்ணைப் பறி கொடுத்தான்; பொன் கூற்றுக்களைக் கூறியதால் தன் நாவிழந்தான். ஏ! அஞ்சா நெஞ்சமே! உன் மறு பெயர்தான் ''குட்டிமணியோ''

## மரணத்தை அழைத்த வீரன்!

தமிழீழ விடுதலை இயக்கத்தின் இளைய மகன் ஜெகன், செயலதிபர் குட்டிமணியுடன் இயந்திரத் துப்பாக்கியும் கையுமாக களம் கண்ட இளம் சிங்கம், வேட்டுக்களைக் குறிவைப்பதில் மன்னவனுயினும் இவன் வயதில் சின்னவன். தான் பெற்ற பயிற்சிகளைத் தன் தோழர்களுக்குக் கற்றுக் கொடுதத கட்டிளம் காளையவன். ''நீதிபதியவர்களே! என்னைத் தூக்கிலிட முடியும் ஆனல் மலரப் போகும் தமிழீழத்தை தூக்கிலிட முடியாது'' என நீதியற்ற நீதிமன்றத்தில் மரண தண்டனை விதித்த போதும் மார்பு தட்டிக்கூறிய மறவன். அழகிய புன்முறுவலும், அடங்காப் புரட்சியுணர்வும் தாங்கிப் புறப்பட்ட முன்னணி வீரன்.



## வினைத்திறன் மிக்க வீரன்!

''செனட்டர்'' எனும் சிறப்புப் பெயர் கொண்ட ''செந்தோழர் நடேசுதாசன்'' முறுக்கேறிய உடலும், நலுக்கான பேச்சும் கொண்ட மறவன் இயக்கத்தின் முன்னேடி நிறுவனங்களில் முதல்வன். இயக்கத்திற்காகவும், இன விடுதலைக்காகவும், சொத்து சுகங்களையும், பந்த பாசங்களையும் துச்சமென எண்ணி தூரவிலகி விடுதலைக்காகத் துணிந்த வீரத் துணைவன். ஆனையிறவு இராணுவ முகாமில் அடிக்கப்பட்ட, உடைக்கப்பபட்ட இவருடைய கட்டான உடம்பில் அழியாத தழும்பேறியும், துரோகிகளைத் துளைப்பதில் முனைப்புடன் செயற்பட்ட வினைத்துறன் மிக்க வீரன்.

## செங்கள வேழம்

தலைவர் தங்கண்ணுவின் தலை சிறந்த மெய்ப்பாது காவலன் ''தோழர் தேவன்'' நெடிய கம்பீரமான தோற்றங் கொண்ட இவர் இராணுவக் கெடு பிடியிலிருந்து சாதுரியமாகத் தப்பிக்கொண்ட சாகசங்களும், சாதனைகளும் ஏராளம் ஏராளம். ராணுவத்தின் ரவைகளேபே வயிற்றில் தாங்கிக் கொண்டு கடலை நீந்தித் தாண்டிச் சென்ற மனவைரம் கொண்டவர். களமாடிய வேழமாயினும், செந்நிற மேனியும் சிரித்த முகமும், நளினமும் நகைச்சுவையுமாக படையுடன் நடனமாடிய இவர், அரச பதவியை உதறி எறிந்து விட்டு போர்க்களம் புகுந்த புனிதப் புரட்சி வேங்கை.

## வெளிக்கள வித்தகர்


சகதோழர்களால் "மாஸ்டர்" என மானசீகமாக அன்போடு அழைக்கப்பட்டு வந்த அபிமானத் தோழர் ''சிவபாதம்'' விடுதலைப் பாசறையின் வெளிக்கள வித்தகர். அரச சேவையில் இருந்து கொண்டே விடுதலைக் களமாடுவதில் விஞேதமாகச் செயற்பட்ட விமோசன வீரர் இவர்.

வீரசாகசங்கள் புரிந்து விடுதலையை முன்னெடுத்து கொலைக் களச் சிறையில் படுகொலைக்குள்ளான முத்துக்குமார் சிறீக்குமார், செல்லச்சாமி குமார், பிலிப் குமார் குலசிங்கம், மரியாம்பிள்ளை போன்ற விடுதலைப் போராளிகள் அனைவருக்கும், இனப் படுகொலையில் உயிர் துறந்த எம் உடன்பிறப்புக்கள் அனைவருக்கும் எம் புனித இயக்கம் தலைதாழ்த்திப் புரட்சிகர வீரவணக்கம் செலுத்துகிறது.

## இரத்தச் சுவடுகளில்

சிறையில் படிந்த இரத்தக் கறைகள் எமது விடுதலை வேட்கையைத் தூண்டிப்பறைசாற்றி உயிர்துறந்த வீரமறவர்களே! உங்களின் மானசீகக் கல்லறைகளே எங்கள் ஈழவிடுதலை இரத்தப் புரட்சிப் பாதைக்கு மைல் கற்களாகட்டும். இது உங்கள் வழிந்தோடிய இரத்தச் சுவடுகளில் நாமிடும் சபதம்!

# பவானே! ஏற்க எமது கண்ணீர் அஞ்சலியை!



காட்டாற்று வெள்ளமென கரைபுரண்டோடும் உணர்ச்சி;

காட்டுத் தீயென எதிரிகளைச் சுட்டெரிக்கும் தீரம்;

வெறும் வார்த்தை வேட்டுகளை போட்டுதுடைத்து-துப்பாக்கி வேட்டையே முழக்கிப் பழகிய வீரம்;

இலட்சியக் குருதியில் நீந்தி வந்த செம்பறவை;

அவனே எம்பவான்!

வார்த்தைக் கட்டுக்குள் கட்டுறுத மான மறவனே!

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் புறப்பாட்டு நெஞ்சுரத்தானே?

நீ என்றும் எம்மோடு தோள் கொடுத்து நிற்பாய் என இருமாந்திருந்தோமே—

அந்தோ!

கடலன்னை உன்னைத் தன் அலைக்கரம் கொண்டு தாவி அணைத்துக் கொண்டாளே!

அவளுக்கு என்ன உன் மீது விருப்பு—

எம்மீது என்ன அப்படி வெறுப்பு?

அவள் உன்னை அணைத்தது குளிரலையால்—

ஆனால் எம்மை அது தீயலையாக வாட்டுகிறதே!

உன் ஊனுடலை மட்டுமே அவளால் பறிக்க முடிந்தது—

ஆனால் உனது உணர்வுடல் எம்மிடம் அல்லவா உள்ளது!

இயற்கை பறித்தது நமது உடற் கூறுகளையே!

உணர்ச்சிக் கூறுகளை அல்ல!

நீ எம்மை விட்டுப் பிரிந்தாலும் உன் நினைவு எம் வரலாற்றில் இணைந்து விட்ட ஒன்றல்லவா?

அந்த எண்ணத் தாகத்தால் உனக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்!

உனது தமிழ் ஈழ விடுதலைப் பணியை தொடர்ந்து முடிப்போம்!

## மரணத்தில் பிறக்கும் வாழ்க்கை!

★ "உயிரிழந்த எனது தோழர்களுக்காக நான் பழி வாங்க சபதம் ஏற்கப் போவதில்லை. அவர்களது உயிர்கள் விலைமதிப்பற்றவை. இந்தக் கொலைகாரர்கள் தங்களது உயிரைக் கொடுத்தால் கூட அதற்கு ஈடாகாது. தங்களது நாட்டிற்காகப் போராடியவர்களின் உயிருக்கு ரத்தம் சிந்துவதன் மூலம் மரியாதை செலுத்த முடியாது. அவர்கள் நேசித்த மக்களின் மகிழ்ச்சியே அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்க முடியும்.

மேலும் எனது தோழர்கள் மறைந்தவர்களல்ல; மறைக்கப்பட்டவர்களுமல்ல. அவர்கள் முன்னெப்போதையும் விட இப்போது தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சடலங்களில் இருந்து அவர்களின் கருத்துக்கள் வெற்றிப் பெருக்குடன் வெளிப்படுவதை கண்டு இந்தக் கொலைகாரர்கள் ஆயாசப்படுவார்கள். தீர்க்க தரிசியின் வார்த்தைகளில் கூறுவதானல் "இறந்தவர்களின் சமாதி அருகே கண்ணீர் சிந்துவதற்கும் ஓர் எல்லையுண்டு. தாய் நாட்டின் மீதும் அதன் புகழின் மீதும் எல்லையற்ற அன்பு செலுத்துவது அந்த எல்லை. இந்த அன்பு என்றும் தோல்வியடைந்ததில்லை. நம்பிக்கை இழப்பதில்லை. சுருங்கி விடுவதில்லை. தியாகிகளின் சமாதிகளே நமது ஆராதனைக்குரிய தேவாலயங்கள்.

★ "தாய் நாட்டின் மடியில் ஒருவன் உயிர் விடும்போது துன்பம் முடிகிறது; சிறைச்சங்கிலிகள் தெறிக்கின்றன. இறுதியில் அந்த மரணத்துடன் வாழ்க்கையும் துவங்குகிறது"

—ஃபிடெல் காஸ்ட்ரோ.

# புரட்சிகரப் பாதையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

என்று இலங்கை சுதந்திரம் அடைந்ததோ (1948ம் ஆண்டு) தொடக்கம் தமிழ் மக்கள் படிப்படியாக சிங்கள பேரினவாத அரசினல் உரிமைகளை யிழந்து வந்தார்கள். தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காக காந்திய வழியில் போராடி வந்த போராட்டங்கள் யாவற்றையும் அரசு, அரசபடைகளினல் முறியடித்து வந்தது.

மேலும் காலத்துக்கு காலம் ஏற்பட்ட சூறையாடல்கள், கற்பழிப்புகள், இனப்படுகொலைகள் போன்ற வன்செயல்களினல் கொதிப்படைந்து எழுச்சி பெற்ற இளைஞர்கள் அரசயங்காரவதத்தை ஆயுதப் போராட்டத்தினல் முறியடிக்கும் நோக்குடன் தமிழீழப் பிரதேசமெங்கும் பரவலாக சமுக்களாக செயற்பட்டு வந்த வேளை 1969ம் ஆண்டு ஓர் அமைப்பாக அணிதிரண்டனர். இவ் அமைப்பே தற்பொழுது மிக முன்னணியில் இயங்குகின்ற இயக்கமாக பரிணமித்தது.

### போராட்டத்தின் முதல் இயக்கம்!

இவ் அமைப்பின் கீழ் இயங்கி வந்த தோழர்கள் நேர்மை, பண்பு, திறமைமிக்கத் தங்கத்துரை அவர்களை தலைவராக தேர்ந்தெடுத்தனர். இவ் அமைப்பின் இளைஞர்கள் தமிழ் இனத்தின் இறைமையை பெற்றுக் கொடுக்கும் நோக்குடனும், அதன் பின் வர்க்க வேறுபாடற்ற ஒரு சோஷலிச வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முற்போக்கான நோக்குடனேயே இயங்கி வந்தார்கள். அடக்கப்படும் மக்கள் தமது சொந்தக் கால்களில் எழுந்து நிற்கவும், தமது விடுதலையை தாமே பெற்றுக் கொள்ளவும் எழுச்சியுறும்போது அந்த மக்கள் முன் எந்த சக்திகளாலும் முன் நிற்க முடியாது,

என்ற வரலாற்று உண்மையை தலைவர் தங்கத்துரை அவர்கள் மக்களுக்கு உணர்த்தி எமது இயக்கத்தை இயன்றளவு வளர்த்து வந்தார்.

எமது அமைப்பானது இன்று தமிழ் ஈழ விடுதலைக்காக போராடிவரும் இயக்கங்களுள், போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதில் முன்னணியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆரம்பகால கட்டத்தில் எமது இயக்கமானது மிக இக்கட்டான பொருளாதார நெருக்கடியின் மத்தியிலும், இயக்கத் தோழர்களின் கடினமான உழைப்பினுல் (பண்ணை அமைத்தல், கூலிவேலைசெய்தல்) தொடர்ந்து வளர்க்கப்பட்டு வந்தது. பின்னர் தமிழ் மக்களின் மத்தியிலே விடுதலை வேட்கை எழுச்சிபெற்ற காரணத்தினுலும் தனிப்பட்டவர்களிடமிருநதும், நிறுவனங்களிடமிருந்தும், வெளிநாடுகளிலுள்ள ஆதரவாளர்களிடமிருந்தும் போதுமான உதவிகள் கிடைத்த காரணத்தினுலும் அமைப்பின் வேலைத்திட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டன.


## காட்டிக் கொடுத்த கயவர்கள்!

இவ்வாறு வளர்ந்து கொண்டு வந்த காலகட்டத்திலே தான் எம்மத்தியில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் காட்டிக் கொடுப்பவர்களினுல் எமது இயக்கத்தின் தலைவர் உட்பட முன்னணி தோழர்கள் அனைவரும் அரச கூலிப்பட்டாளங்களால் கைது செய்யப்பட்டு பெரும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டார்கள். விசாரணையின் முடிவில் ஒப்புதல் வாக்குமூலத்தின்படி செயலதிபர் குட்டிமணி முன்னணி வீரர் ஜெகன் ஆகிய இருவருக்கும் மரண தண்டனையும், தலைவர் தங்கத்துரை உட்பட நடேசுதாசன், தேவன், சிவபாதம் (மாஸ்டர்) ஆகியோருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.


பாஸிஸ நீதிமன்றத்தில் தலைவர் தங்கத்துரை அவர்கள் ஆற்றிய உரை ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

கனம் நீதிபதி அவர்களே!

நாம் வன்முறை மீது காதல் கொண்டவர்களோ அன்றி அது மாதிரியான நோய்களால பாதிக்கப்பட்ட மனநோயாளிகளோ அல்லர். மாருக விடுத்







ரெலோ, ஈரொஸ், ஈ. பி. ஆர். எல். எஃப் ஆகிய மூன்று இயக்கங்களும் ஒருங்கிணைந்து செயலாற்றுவது என்று எடுக்கப்பட்ட முடிவிற்குப் பிறகு எடுக்கப்பட்ட படம்: இடமிருந்து வலம் பத்மநாபா (EPRLF), பாலகுமார் (EROS) ஸ்ரீசபாரத்தினம் (TELO)

லையை முன்வைத்துப் போராடும் ஒரு ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கின்ற நேர்மையான போராளிகளே நாங்கள்! எமது நோக்கமானது மிகவும் விசாலமானது :-

ஆப்பிரிக்க கண்டமாஞலும் சரி, லத்தீன் அமெரிக்க நாடாஞலும் சரி, எங்கெங்கு அடக்கி ஒடுக்கப்பட்டு மக்கள் வாழ்கிருர்களோ அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காகப் போராடும் நோக்கத்தையும் உள்ளடக்கியது. அப்படியிருக்கையில் எமது சகதேசத்தவரான மக்களின், குறிப்பாக சிங்கள மக்களின் நலன் அதற்குள் அடங்காது எப்படி போகும்.

தலைவர் ஆற்றிய இச் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த உரையானது சர்வதேச - நாடுகளிடையே ஒரு பொதுவான அபிப்பிராயத்தை ஏற்படுத்தி தந்ததுடன் எமது அமைப்புக்கு சர்வதேச மட்டத்தில் பல உதவிகளையும் பெற்றுத்தந்தது.

நமது தலைவரும் பல முன்னணி தோழர்களும் வெலிக்கடைச் சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டிருந்த வேளையில் கடந்த 1983 ஜூலை இனக்கலவரத்தின் போது துடிக்க துடிக்க படுகொலை செய்யப்பட்டமை உலகம் அறிந்ததே.

## சிங்கள அரசு செய்த படுகொலை!

ஜனநாயக நாடொன்றில் சிறைவைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளை அந் நாட்டரசாங்கமே திட்டமிட்டு படுகொலை செய்த பெருமை உலகில் ஸ்ரீலங்கா இனவாத அரசையே சாரும். எமது இயக்க போராளிகளின் இழப்பு எமது இயக்கத்தின் இழப்பு மட்டுமல்ல தமிழ் ஈழத்திற்கே பெரும் இழப்பாகும். எமது இயக்கம் தலைவரையும் பல முன்னணி போராளிகளையும் இழந்த போதும் தலைவர் தங்கத்துரை அவர்களின் வழி நடத்தலின் கீழ் வளர்த்தெடுக்கப்பட்டவரும் சக போராளியுமான, நுண்ணறிவும், பேராற்றலும் உடைய நமது தற்போதைய செயலதிபர் ஸ்ரீ சபாரத்தினம் அவர்களின் வழி நடத்துதலின் கீழ் புரட்சிகர பாதையில் மிக வேகமாக முன்னேறி வருகின்றது.

மக்களை ஸ்தாபன மயப்படுத்தி புரட்சிகர சித்தாந்தத்தின் அடிப்படையில் வளர்த்தெடுத்து விரிவாக்கப்பட்ட மக்கள் ஆயுதப் புரட்சி ஒன்றின் மூலமே தமிழ் ஈழ விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ் ஈழ விடுதலை இயக்கமானது மக்களை ஸ்தாபனமயப்படுத்தி சித்தாந்த ரீதியாக வளர்த்தெடுத்து ஆயுதப் பயிற்சிகளை அளித்து புரட்சிக்கான ஆயுதங்களை செய்வதில் தன் பங்களிப்பை துரிதமாக நிறைவேற்றி வருகின்றது. எமது அமைப்பின் நிர்வாகமானது அரசியல் பிரிவு, இராணுவப் பிரிவு பிரச்சாரப்பிரிவு, தகவல் தொடர்பு பிரிவு, கண்காணிப்பு பிரிவு. அத்தியாவசிய தேவைகள் பிரிவு, சர்வதேச சம்பந்தப் பிரிவு. மருத்துவ சுகாதாரப் பிரிவு போன்ற பல பிரிவுகளை உள்ளடக்கி, நானுவித பயிற்சி அளிக்கப்பட்ட இளைஞர்களையும் யுவதிகளையும் உள்ளடக்கிய மிகப்பலம் வாய்ந்த ஸ்தாபனமாக இயங்கி வருகின்றது.

## மக்கள் போராட்டமே எமது போராட்டம்!

எமது போராட்டமானது கண்மூடித்தனமாக ஸ்ரீலங்கா படைகளைத் தாக்கிவிட்டு ஓடி மறையும் போராட்டமல்ல. தொடர்ச்சியான மக்கள் ஆதரவுடன் பரவலாக எமது இறுதி இலட்சியம் வரை தொடர்ந்து நடைபெறும் பலமான புரட்சிகர ஆயுதப்போராட்டத்துடன் வர்க்க விடுதலையையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

மேலும் நமது விடுதலையானது இந்தியப் பாதுகாப்புடன் பின்னிப் பிணைந்துள்ளது. நமது செயலதிபரின் முற்போக்கு சிந்தனையில் விடுதலை இயக்கங்களின் விரிவான செயலாக்கத்திற்கும் விடுதலையின் நன்மை கருதியும் விடுதலை இயக்கங்கள் ஒன்றுபட வேண்டும் என்ற நிலைப்பாட்டினுல் EPRLF, EROS போன்ற விடுதலை அமைப்புக்களுடன் ஒன்றுபட்டு செயல்பட்டு வருகின்றது. மேலும் மற்றைய விடுதலை இயக்கங்களுடன் இணைய வேண்டும் என்ற பரஸ்பர நோக்கில் செயல்படுகின்றது.



போராட்ட காலங்களில் மக்களின் அத்தியாவசிய தேவைகளும் பாதுகாப்பும் மக்களுடன் இணைந்ததாக தகுந்த முறையில் செய்வதில் எமது இயக்கம் முன்னிற்கும் என்பதில் ஐயமில்லை. எமது இயக்கத்தால் கட்டுப்பாடு, ஒழுக்கம், உறுதி, உயர்ந்த தியாக உணர்வு போன்றவற்றுடன் சித்தாந்த ரீதியில் பூரணமாக வளர்த்தெடுக்கப்பட்ட விடுதலை வீரர்கள் ஸ்ரீலங்கா அரசயந்திரத்தை முறியடித்து இழந்த பிரதேசங்களையும் தமிழ் மக்களின் இறைமையையும் மீட்டெடுப்பார்கள் என்பது வெள்ளிடைமலை.

## உண்மை விடுதலை ஒடுக்கு முறை ஒழிப்பு!

தேசிய இன ஒடுக்குமுறையில் இருந்து ஒரு இனம் உண்மையான விடுதலை பெற வேண்டுமாயின் அவ் ஒடுக்கு முறையின் அடிப்படையாக அமைந்துள்ள சுரண்டலும் சூறையாடலும் கொண்ட பெரும்பான்மையான மக்களுக்கு கொடுமைகளையும் அநீகளையும் இழைக்கின்ற சமுதாய அமைப்பை முற்று முழுதாக மாற்றும் வழியில் செயல்பட வேண்டும். அவ்வாறு செயற்படாது தனியே இன அடிப்படையில் விடுதலை என்று சென்றால் இன ஒடுக்கு முறையின் உருவம் மாற்றம் பெறுமே அன்றி அதன் உள்ளடக்கமான ஏற்றத்தாழ்வு கொண்ட சமுதாய அமைப்பு மாற்றம் அடையாது.

ஆதலால் எமது நாட்டின் தேசிய இனப் பிரச்சினையின் இறுதித் தீர்வானது பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான ஒரு புதிய ஜனநாயகப் புரட்சியின் வெற்றி மூலமும் அதைத் தொடர்ந்து நடைமுறைக்கு கொண்டு வரக் கூடிய உண்மையான சோஷலிச பொருளாதார அமைப்பின் உருவாக்கத்திலுமோ தங்கியுள்ளது. இது பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் ஏனைய உழைக்கும் மக்கள் முன்னெடுக்கும் புரட்சிகர போராட்டத்தினுல் மட்டுமே சாத்தியமாகும் என்பதில் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டுள்ளது. இதனை நடைமுறையில் செயற்படுத்துவதற்கு விரிவாக ஆராய்வு நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதனை நடைமுறைப் படுத்தும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

---

0 மதம் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டை,

—லெனின்—

0 அறிவு தரும் கல்விக்கு ஆகும் செலவை விட அறியாமைக்கு ஆகும் செலவே அதிகம்.

—பிளேட்டோ

0 மக்களுக்காக, மக்களால் நிறுவப்பட்ட மக்கள் அரசாங்கம் பூமியிலிருந்து ஒரு நாளும் மறையாது.

—ஆபிரகாம் லிங்கன்

# தலைவரின் தத்துவக் கருத்துக்கள்!



எமது தாய்நாடான இலங்கையிலே காலத்துக்குக் காலம் கால் மாறிக் கொண்டு கர்ஜனை புரிந்து வந்த சிங்கள அரசுகளால் எமது தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட, படிப்படியாக துரித வளர்ச்சியை நோக்கிய கொடுமைகள், அடிமைத் தளைகள் உச்சக் கட்டத்தையடைந்த காலமதில்; தமிழ் தலைவர்கள், தமிழினத்தை வழி நடத்தி வந்தவர்கள். இது காலம்வரை தாங்கி வந்த 'காந்திய அஹிம்சை சப்பாணிப் போராட்டங்கள்' எமது இன விடுதலைக்கு எள்ளளவும் பயன் படாதென்பதைப்; பல தடவைகளில் அவர்கள் பெற்ற தோல்விகள் வாயிலாகவும் வரலாற்றுப் பின்னணிகளாலும் அறிந்து, தமிழினத்தின் முழுமையான விடுதலைக்கு புரட்சிகரமான ஒரு தனிப் பெரும் இயக்கமாம் "தமிழீழ விடுதலை இயக்கமதை ஸ்தாபித்த பெருமை அதன் முன்னணித் தலைவர் தோழர்—தங்கத்துரை அவர்களையே சாரும்!'

இவர் சிங்கள பாஸிஸ நீதிமன்றத்தில் ஆற்றிய உரை உலகப் புகழ் மிக்கதும் வரலாற்றிலே பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியதுமான உலக முற்போக்கு சக்திகளுக்கு வித்தான சொத்தாகத் திகழுமென்பதில் மறுப்பேது? இதுவே ஸ்ரீலங்கா சிங்கள அரசின் சீற்றமடக்க வந்தோர் சிம்ம கர்ஜனை! தமிழீழம் தழைத்தோங்க விளைந்தோர் தாரக மந்திரம்!! தமிழீழ வரலாற்றுக்கேவுரித்தானதொரு முன்னணி ஏடு!!!

தமிழீழ விடுதலை இயக்கத்தின் போராளிகளான 'ரெலோஸ்டு'களை இதன் தலைவர் தோழர் தங்கத்துரை அவர்கள் மிகவும் புரட்சிகரமாகவும் சித்தாந்தமயப் படுத்தியும் வடித்து எடுத்திருக்கின்றார். மேலும் தமது இயக்கம் ஒரு மாக்ஸிய சிந்தனையில் வார்க்கப்பட்ட கட்டியெழுப்பப்பட்ட சிகரமென்பதனையும் மிகவும் மனவுறுதியுடனும் ஆணித்தரமாகவும்;

"நாம் வன்முறை மீது காதல் கொண்டவர்களோ அன்றி, அதுமாதிரியான நோய்களால் பாதிப்புற்ற மன



நோயாளிகளோ அல்லர்! மாறாக தமிழின விடுதலையை முன்வைத்துப் போராடும் ஓர் ஸ்தாபனத்தில்; அங்கம் வகிக்கும் நேர்மையான போராளிகளே!"

என்று தமது நிலைப்பாட்டையும் தம் இயக்கத்தின் எழுச்சி மிகு போராளிகளையும் இயக்கத்தின் முற்போக்கு சிந்தனையையும் பற்றி எடுத்துரைக்கின்றார்.

தமிழின விடுதலையைத் தீவிரமாக முன்னெடுக்கும் 'ரெலோஸ்ட்டு'களின் வெளியுறவுக் கொள்கைபற்றி மிகவும் வெளிப்படையாக முன் வைக்கிறார் தலைவர். சர்வ தேச ரீதியாக தலைதூக்கியிருக்கும் முதலாளித்துவ சிந்தனையினால் ஆங்காங்கே நிலவும் அடக்கு முறைகள், ஒடுக்கு முறைகளால் நசுக்கப்பட்டு வரும் அனைத்து மக்களும் முன்னெடுக்கும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாகவும் இவ்விடுதலைப் போராட்டங்களை மழுங்கடிக்கும், மழுங்கடிக்க எத்தனிக்கும் எந்தச் சக்திகளுக்கும் எதிராகவும் தமது விடுதலை இயக்கம் கொண்டிருக்கும் வெளியுறவுக் கொள்கையை;

"எமது நோக்கம் மிகவும் விசாலமானது. அது ஆபிரிக்காக் கண்டம் என்றாலென்ன, லத்தீன் அமெரிக்க நாடுகளென்றாலென்ன எங்கெங்கு அடக்கி ஒடுக்கப் பட்ட மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காகப் போராடும் நோக்கத்தையும் உள்ளடக்கியது!"

என்று ஒரு விசாலமான கருத்தை உலக அரங்கிலே முன் வைத்து எமது இயக்கத்தின் தனிப் பெரும் தன்மையைப் பறைசாற்றியிருக்கின்றார்.

முதலாளித்துவ சிந்தனை கொண்ட பிற்போக்குவாத நாடொன்றில் நிலவும் சுரண்டல்களால் இனரீதியாக, வர்க்க ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் தாங்கள் அனுபவித்த கஷ்டமான நிலைமைகளை உணர்ந்து, ஓர் இன விடுதலையையோ வர்க்க விடுதலையையோ முன்னெடுக்க; மாக்ஸிய, லெனினிய சிந்தனை வழியே முனைந்து அதற்கான முன்னேற்ற நடவடிக்கைகளை எடுப்பதற்காக நாம் முன்வைக்கும் தீர்க்கமான செயற்பாடுகளும் முடிவுகளும் தேசத்துரோகமானதாகவோ அன்றி, பயங்கரவாத நடவடிக்கைகளாகவோ கருதப்பட்டால் இந்த வேடிக்கையை சித்தாந்த வழி வந்த எந்தவொரு மனிதனும் ஏற்றுக்கொள்ள மாட்டான் என்பதனை;

"எந்தவொரு தேசிய இனமும் தனது இறைமையை நிலைநிறுத்துவதும் பறிக்கப்பட்ட பின் அதனை மீளப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதும் தேசத் துரோகமோ அன்றி, பயங்கரவாதமோ என உலகில் எந்த ஒரு சாசனமும் கூறவில்லை"

எனக் கூறி, அப்படிப்பட்ட சிந்தனை வாதிகளுக்கு, உண்மையை ஊட்ட வேண்டுமெனக் கருதி, நீதி மன்றத்தில் சிங்கள முதலாளித்துவ சிந்தனையாளர்கட்கு மாக்ஸீய சித்தாந்தம் ஊட்டியிருக்கின்றார்.

ஆண்டாண்டு காலமாக ஸ்ரீலங்காவில் தோன்றிய சிங்கள முதலாளித்துவ அரசுகளின் இனவாத ஒடுக்கு முறைக்கு உட்பட்டு, சுரண்டல்களால் நசுக்கப்பட்ட இலங்கைவாழ் தமிழ் மக்கள் தங்கள் முழு இறைமையையும் இழந்த நிலையில் தங்கள் அடி மனத்திலேயே வேரூன்றிய விடுதலையுணர்வை விடுத்து அதற்காக அம்மக்கள் வளர்த்து வரும் விடுதலை இயக்கத்தின் எழுச்சியை விடுத்து. இதற்காக அளித்துவரும் தியாக சிந்தனைகளை விடுத்து ஸ்ரீலங்காவின் சிங்கள அரசிடம் எவற்றை எதிர்பார்த்தார்கள்? எவற்றை எதிர்பார்க்கிறார்கள்?

"உங்களிடம் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பது பொருளாதாரத்தையோ அன்றி வேலை வாய்ப்பையோ அல்ல—அவற்றை உங்கள் பொருளாதாரக் கொள்கைகளொன்றும் நிறைவேற்றப் போவதுமில்லை!"

என்று எமது எதிர்பார்ப்புகளையும், உணர்வுகளையும் மற்றும் அரசின் அதற்கான கையறு நிலைமைகளையும் உணர்த்துவதன் மூலம் அரசின் முதலாளித்துவ பிற்போக்குப் பொருளாதாரக் கொள்கைகளினால் எந்த விடிவையும் ஏற்படுத்தவே முடியாதென்றும், சில வேலை வாய்ப்புகள், பதவிகள் வழங்கி, இலங்கைத் தமிழர்களைப் "பேய்க்காட்டும்" நடவடிக்கைகளால் இனிமேல் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை என்பதனை அரசுக்கு நன்கு உணர்த்துகின்றார்.

தமிழ் மக்களுக்கு சிங்கள இனவாத அரசு எப்பேர்ப்பட்ட கொடுமைகளை இழைத்திருந்த போதும்; தமிழீழ விடுதலை நோக்கிப் புறப்பட்ட தியாகச் செம்மல்களுக்கு எத்துணைச் சொல்லொண்ணாச் சித்திரவதைகளை அளித்திருந்த போதும்;

"சிங்கள மக்கள் எமக்கு விரோதிகள் அல்லர்!"

என்பதனை இந்தக் கொடுமைகளுக்கே உட்பட்டு சித்திரவதைகளுக்கு ஆளாகிய தலைவர் அவர்களே, மிகவும் தோழமை



நிறைந்த உணர்வுடன் மனந்திறந்து கூறியிருக்கின்றார் என்றால்.......? மேலும் எமது சக தேசத்தவரான சிங்களப் பாட்டாளி மக்களின் நலன்கள் கூட அவரது சிந்தனைக்குள் அகப்படாமற் போகவில்லை!

சிங்களப் பாட்டாளி மக்கள் தற்போதய அரசின் பொருளாதார நடவடிக்கைகள், முதலாளித்துவ சுரண்டல்கள் தாங்காமல், இவற்றிலிருந்து விடுதலை பெற முயலும் போது; அவர்கள் மாக்ஸீய ரீதியில் வளர்க்கப் பட்டு, சிறந்ததொரு தலைமையின் கீழ் ஒன்று பட்டு, அடிமை விலங்கொடிக்கப் புறப்பட வேண்டும் எனவும் இதற்கான சகல வசதிகளையும் அயல் நாட்டவரான நாங்கள் நிச்சயமாக அளிப்போமென்ற உறுதி மொழியில்;

"சிங்கள மக்களே, தற்போதய சமூக பொருளாதார நடவடிக்கைகளே தொடர்ந்து, அதன் சுமை தாங்காது என உணர்ந்து, அதன் தடைகளை உடைத்து, உங்களை விடுவிக்க நீங்கள் நடாத்தும் போராட்டத்துக்கு நாம் மிகவும் உறுதுணையாக இருப்போம்!"

என்றும்;

நாம் எடுத்துக் கொண்ட மாக்ஸீய ரீதியான நடவடிக்கைகளாலும் சிந்தனை மயப் படுத்தப்பட்ட போராளிகளாலும் சித்தாந்த ரீதியில் கட்டி வளர்க்கப்பட்ட கட்சி அமைப்பினாலும் சோஷலிஸ நாடுகள் சிலதந்த வரலாற்றுக் கண்ணோட்டத்திலும்; எமது விடுதலையின் நிச்சயிக்கப்பட்ட உண்மையைத் தீர்க்க தரிசனமாக;

"நாம் விடுதலை பெறுவது நிதர்சனமான உண்மை! அதன் பின்னர் உங்கள் நாட்டின் சட்டப் புத்தகங்களில் நிரந்தர இடம் பெற்றுவிட்ட எச்சட்டங்களும் எம்மை அணுகா! அப்படியாயின் இச்சட்டங்களையும் பயங்கரவாதத்தையும் எதிர்காலத்தில் நீங்களே சுவீகாரம் எடுப்பீர்களென்ற கையறு நிலையை இப்போதே எய்து விட்டீர்களா?

எனக் கூறி; ஸ்ரீலங்கா முதலாளித்துவ அரசினால் தற்போது தமிழர்கட்கு எதிராகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் கொடூரமான சட்ட நடவடிக்கைகளும், இதனாலான தமிழினத்தின் எதிர் விளைவுகளும் தமிழீழ விடுதலையின் பின்பு சிங்களத் தோழர்களாலேயே சுவீகரிக்கப்பட்டு விடும்! ஏனென்றால் இம்முதலாளித்துவத்தின் சுரண்டல்களையும் ஒடுக்கு முறைகளையும் தாங்காது

சிங்களத் தோழர்கள் கிளர்ந்தெழும் போது, இவர்களின் வர்க்க விடுதலைக்கான புரட்சிகர நடவடிக்கைகளை ஒடுக்க, அரசின் ஒடுக்கு முறைச் சட்டங்கள் மீண்டும் சிங்கள மக்களையே நோக்கித் திரும்புமென்பதை எமது தேசத்தவர்கள் உணர வேண்டியிருக்குமென்பதைத் தெளிவு படுத்தினார்.

தமது இறுதிப் பயணத்தில் தமது மக்களுக்காகக் கடைப் பிடித்த நடைமுறைகள் கொள்கைகள் பற்றிய திருப்தியினால்,

> ''நாம் விதைத்தவை விஷ விதைகளுமல்ல, எய்தவை நச்சுப் பாணங்களுமல்ல, அதனால்தான் இந்த நிமிடத்திலும் நான் மிகத் தெளிவான மன நிறைவுடன் நிற்கிறேன்!''

என்றும்;

> ''எனவே நாம் எமது கடமையை முடிந்தவரை செய்த மன நிறைவுடன் எதிர்காலத்தை சிறையில் கழிக்கவோ, வேண்டுமாயின் மரணத்தைக் கூடத் தழுவவோ தயங்கவில்லை!

என்றும் தாம் முன் வைத்த கொள்கையின் தீர்க்க தரிசன உண்மையை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றார்.

மேலும் தமது இறுதியுரையில் தாம் கூறிய கருத்துகள் யாவும் சமூக விஞ்ஞான அடிப்படையில் எழுதப்பட்ட வரலாற்றுப் பொருள்முதல் வாத ரீதியில் அணுகப் பட்டதும், சோஷலிஸ நாடுகள் தந்த வரலாற்றுப் பாடங்களாகவும் இருப்பதனால்;

> ''உண்மைக்கு மேடையோ அன்றி, வெளிச்சமோ போட்டுக் காட்ட வேண்டியதில்லை! அது மிகவும் மகத்தானது. அது வெளிவருவதை எச்சக்தியாலும் நிரந்தரமாத் தடுத்து நிறுத்தி விடமுடியாது!''

எனக்கூறி, தாம் வழி நடாத்திய இயக்கத்தின் மகிமையையும் அது கொண்டுள்ள விசாலமான கொள்கைகளையும் தெளிவாக்கி, எமது தமிழினத்தின் விடுதலைத் தாகத்தை உலகறிய வைத்த மாபெரும் மாக்ஸிய சிந்தனையாளர் எமது தலைவர் 'தோழர் தங்கத்துரை' அவர்களே!

---

- ☐ மனிதன் புறச் சூழலால் உருவாக்கப்படுகின்றான் என்றால், அந்த புறச்சூழல் மனிதத் தன்மையுடையதாக்கப்பட வேண்டும் —கார்ல் மார்க்ஸ்
- ☐ வெகு ஜனங்களின் முன்முயற்சி இன்றி புரட்சிகர இயக்கம் முன் செல்ல முடியாது —யாரோ
- ☐ தனிச் சொத்துடைமையை ஒழித்தால் மட்டுமே உண்மையான மனித உரிமைகள் நிலை நாட்ட முடியும் —யாரோ
- ☐ உண்மையான புரட்சிகரப் போராட்டம் மட்டுமே இறுதி விடுதலையை வென்றெடுக்கும் —யாரோ



# பயிற்சி பெற்ற ராணுவம் தமிழ் ஈழ விடுதலை இயக்கம்!

## செயலதிபர் சிறீசபாரத்தினம் பேட்டி!

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலதிபர் தோழர் சிறீசபாரத்தினம் ஜனவரி மாதம் 15ம் திகதி தொடக்கம் 26ம் திகதி வரை ஐரோப்பாவுக்கு விஜயம் செய்த போது ஜேர்மனியில் வைத்து "தமிழ் முரசு" ஆசிரியர் உமாகாந்தனும் ''எண்ணம்'' ஆசிரியர் மகாதேவாவும் பேட்டி கண்டனர். அதன் விபரத்தை இங்கு தருகிறோம்.

### பயிற்றுவிக்கப் பட்டவர்களின் இயக்கம்!

**தமிழ் முரசு ஆசிரியர் :-** தலைவர்கள் தங்கத்துரை குட்டிமணி கைது செய்யப்பட்ட பின் TELO இயக்கத்திற்கு ஏற்பட்ட இன்னல்கள் யாவை? அவற்றை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்?

**செயலதிபர் :** தலைவர்களது கைது எம்மைக் கதிகலங்க வைத்தது. அவர்களுக்கு ஏதாவது நடந்தாலும் கூட இயக்கத்தைத் தொடர்ந்து நடத்தக்கூடிய வகையிலே எம்மைப் பயிற்றுவித்திருந்தார்கள். அவர்கள் சிறைப்பட்டது தற்காலிகம் என எண்ணினோம். சிறையில் இருந்தும் தலைவர்கள் அவ்வப் போது அறிவுறுத்தல்களை செய்து கொண்டிருந்தனர். இதனால் நாம் பிரச்சினைகளை எதிர் கொண்டு இயக்கத்தை கட்டி வளர்க்கக் கூடிய நிலை ஏற்பட்டது. தலைவர்கள் கைது செய்யப்பட்ட அடுத்த சில நாட்களிலேயே எமது இயக்கத்தைக் குலைக்கும் வகையில் சிலர் நடந்து கொண்டனர். எமது இயக்கம் காற்று மழைக்கு தாங்கக் கூடிய வகையில் இறுக்கமாகக் கட்டி வளர்க்கப் பட்டதால் இவற்றை நாம் எதிர் கொண்டோம்.

### காட்டிக் கொடுத்த கயவர்கள்!

**எண்ணம் ஆசிரியர்.-** தமிழ் ஈழப் போராட்டத்தை 10 வருடங்களுக்கு மேலாக முன்னெடுத்துச் சென்ற அனுபவம், இராணுவ தந்திரங்களுடன் கூடிய தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி எவ்வாறு இவ்வளவு இலகுவில் சிறீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்டனர்?

**செயலதிபர்:-** இவர்களுடைய கைது ஒரு உளவாளியால் காட்டிக் கொடுக்கப்பட்டதே! இவ் உளவாளியையும் அவரின் அரசியல் பின்னணியையும் நாம் வெளிக் கொண்டு வருவதற்கான பிரயத்தனங்களை எடுத்து வருகிறோம். 10 வருடத்துக்கு மேலாக விடுதலை இயக்கத்தை கட்டுக் கோப்பாக வளர்த்தெடுத்த அனுபவத்தை தன்னகத்தே கொண்ட எமது தலைவர்களை பலகாலமாக கைது செய்ய முயற்சித்தும் அது முடியாமலே இருந்து வந்தது. உடர் அதிகாரிகள் இவர்கள் நடமாடும் இடங்களை அறிந்து கைது செய்யும் படி அனுப்பியும் கூட பொலீஸார் கைது செய்ய முயற்சிக்காமலே திரும்பிச்சென்ற சம்பவங்களும் உண்டு. மக்களுடன் கரைந்திருந்ததும், மக்களுக்கு



இவர்கள் மேல் இருந்த அபிமானமுமே இவர்களைக் காப்பாற்றியது. எமது தலைவர்கள் கைதாகக் காரணமான உளவாளியை தமிழ் மக்களினுள் நடமாடத் தொடர்ந்து அனுமதித்துக்கொண்டு தமிழீழத்தை எடுப்பதென்பது என்றென்றும் சாத்தியமாகாது.

## விடுதலைக்கு ஒவ்வாத தனி நபர் பயங்கரவாதம்!

**தமிழ் முரசு ஆசிரியர் :-** "தனி நபர் பயங்கர வாத நடவடிக்கைகள்" மூலம் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க முடியுமா?

**செயலதிபர்:** முடியாது. அனைத்து தமிழ் மக்களும் ஏகோபித்துப் போராடி நிர்மாணிக்க வேண்டிய தமிழ் ஈழத்தை நாலைந்து பேரின் துணிகரச் செயல்களால் சாதித்து விடமுடியாது. ஒரு காலகட்டத்தில் நாமும் இதே போன்ற செயல்களைச் செய்தோம். அந்நாட்களில் நாம் இச்செயல்களில் ஈடுபட்ட போது பொலிசார் ஆயிரக் கணக்கில் மக்களை அழிக்கவில்லை. மாறாக



இச்செயல்களில் ஈடுபட்ட எம்மையே தேடி அழிக்க முற்பட்டனர். தனி நபர் பயங்கர வாத நடவடிக்கைகளின் போது அரசாங்கம் எடுத்த பிரதி நடவடிக்கைகள் எம்மை ஒட்டு மொத்தமாக வெகுஜனப் போராட்டத்திற்கு தயாராக வேண்டிய நிலைமைகளை சிருஷ்டித்தது.

## அரசியல் கருத்து வேறுபாடும் சரீர ரீதி அழிப்பும்!

**எண்ணம் ஆசிரியர்:-** அரசியல் கருத்து வேறுபாடு கொண்டவர்களை சரீர ரீதியில் அழிப்பதன் மூலம் பிரச்சனைகளைத் தீர்த்து விடலாம் என TELO நம்புகிறதா?

**செயலதிபர்:-** இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தை கட்டி வளர்த்துக் கொண்டு போகும் போது இடையிடையே கருத்து வேறுபாடுகளும், கன்னைப் போக்குகளும் தோன்றி மறைவதும் இயற்கையே. இதை அனைத்து இயக்க அங்கத்தவர்களின் பொது முயற்சியாலும் கருத்துச் சுதந்திரத்துக்கு உத்தரவாதமுள்ள தொடர்ந்த கலந்துரையாடலாலும் ஏகவின மாக்கி விடலாம். கருத்து முரண்பாடுகள் இயக்க வளர்ச்சியின் பிரதிபலிப்பே. சமுதாயம் தூங்கிக் கொண்டிருக்கும் போது விடுதலைச் சுமையை தாமே ஏற்பதாக விடுதலை இயக்கத்தனுள் சேர்ந்து பலகாலம் இசைந்து இயங்கிய சக தோழர்கள் சீரற்ற அரசியல் நெருக்கடிகளின் தாக்கங்களினால் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்தார்கள் என்பதற்காக அவர்களை சரீர ரீதியில் அழிப்பது என்பது அரசியல் வறுமையாகும்.

## திராகரிக்கப்பட வேண்டிய மாநில சபைகள்!

**தமிழ் முரசு ஆசிரியர் :-** மாநில சபைகள் குறித்து TELO வின் நிலைப்பாடு என்ன?

**செயலதிபர் :-** மாநில சபைகளை நாம் முற்று முழுதாக நிராகரிக்கிறோம். தமிழீழம் தவிர்ந்த மற்றைய பிரதியீடுகள் எதையும் நாம் ஒரு போதும் ஏற்கவில்லை. தமிழ் ஈழம் தவிர்ந்த மற்றைய பிரதியீடுகளை நாம் ஏற்போமானால் மறைந்த எமது தலைவர்களுக்கும் தமிழீழப் பிரயத்தனத்தில் மடிந்த மற்றைய தோழர்களுக்கும் இன்று அகதிகளாக்கப்பட்ட ஆயிரக் கணக்கானோருக்கும் நாம் துரோகம் செய்தவராவோம். மாநில சபைகள் தமிழ் மக்களது எந்தவித பிரச்சனைகளையும் தீராது. கடந்த கால அரசாங்கங்கள் ஒவ்வொரு நெருக்கடியின் போதும் கொண்டுவந்த தீர்வுகளும் அறிவித்த அபிவிருத்தி பிரேரணைகளும் எந்த மட்டத்துக்கு தமிழ் மக்களது உயிர் வாழ்வதற்கான உத்தரவாதமும் இல்லாத நிலைகள் வளர்ந்து சென்றதோடு, கடைசியில் நடந்த இனப்படு கொலையில் 2000க்கு மேலான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதானது, அரசாங்கம் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடும் எந்தக் காட்டு மிராண்டித்தனத்தையும் தட்டிக் கேட்க யாருமில்லை என்ற மனோபாவத்தோடு செயற்பட்டதை தெளிவாக்கியது. தமிழ் மக்களுக்கு மேலான ஒடுக்கு முறையை

எதிர்கொள்ளவல்ல ஒரு பலமான ஸ்தாபனத்தை உருவாக்க வேண்டும். இந்த ஸ்தாபனத்தினூடேதான் தொழிற்சாலைகளை நிர்மாணிக்கவும் தமிழ் மக்களது அடிப்படை வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கவும அவர்களது வாழ்வை சுபீட்சமாக்கவும் வல்ல வேலைத்திட்டங்களை நிறைவேற்றவும் முடியும். சுதந்திர தமிழ் ஈழத்திலுள்ள தமிழ் மக்களது மனோவியலை யாதொரு அபிவிருத்தித் திட்டத்திற்கும் செயல் வடிவம் கொடுக்கக் கூடிய வகையில் இசைந்து செல்லும்.

## தமிழ் ஈழத்தை அங்கீகரிப்போர் எமது நேச சக்திகள்!

**எண்ணம் ஆசிரியர்:-** தமிழீழ போராட்டத்தில் உங்கள் நேசசக்திகளாக யாரைக் கருதுகிறீர்கள்?

**செயலதிபர்:-** U. N. P. அரசுக்கு எதிராகப் போராடும் தமிழ் ஈழத்தை நடைமுறையில் அங்கீகரித்த அனைத்து சக்திகளையும் U. N. P. எஜமானர்களான அமெரிக்க — ஐரோப்பிய, ஏகாதிபத்தியங்களுக்கு எதிராகப் போராடும் தொழிலாள வர்க்க கட்சிகளையும், தொழிற்சங்கங்களையும், காலனித்துவ— நவ காலனித்துவத்துக்கு எதிராகப் போராடும் தேசிய விடுதலை இயக்கங்களையும் நாம் எமது நேச சக்திகளாக கருதுகின்றோம்.

## தமிழின இராணுவத்தின் கரு!

**தமிழ் முரசு ஆசிரியர்:-** உங்களது இராணுவத் தயாரிப்புகள் தற்சமயம் எந்தக் கட்டத்தை வந்தடைந்திருக்கிறது?

**செயலதிபர்:-** மறைந்த எமது தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் அரசியல் வானுக்கு வருமுன்னர் தமிழ் மக்கள் ஓர் இராணுவத்தைப் படைக்கச் சக்தியற்றவர்கள் என்ற எண்ணக்கரு நிலவி வந்தது. அந்த நாட்களில் ஏற்பட்ட தமிழ் மக்களது தொடர்ந்த தோல்விகள் இதைப் பொதுமைப் படுத்தத் தக்கதாகவே இருந்தது. அந்த நாட்களிலே அரசியல் வானுக்கு வந்த தலைவர்கள் தங்கத்துரை-குட்டிமணி அரசாங்கத்தின் ஒடுக்கு முறைக்கு எதிரான தமிழ் மக்களது சத்தியாக்கிரகம் போன்ற போராட்டங்களின் தோல்விகளுக்கு மத்தியில் நின்றதால் ஓர் இராணுவத்தைத் தோற்றுவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள், தமிழ் மக்களது தொடர்ந்த தோல்விகளுக்கு மத்தியில் இவர்களது முன் முயற்சியும் விட்டுக் கொடாத பிராயத்தனமும் தமிழ் ஈழ விடுதலை இயக்கமாக உருவெடுத்தது, இந்த நாட்களில் நாம் நடைமுறைத் தடைகளால் சூழப்பட்டு இருந்தோம். குறிப்பாக ஒரு இராணுவத்தைப் படைக்கத் தேவையான இராணுவ நிறைவேற்றுளர்களையும். இராணுவ உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளும் நடைமுறைத் தடைகளின் மத்தியில் தமிழினம் பூண்டோடு அழியும் அபாயம் நெற்றிக்கு நேர் வரவே இத்தடைகளை வெற்றி கொள்ளும் வழிகளும்



மெல்ல மெல்ல திறப்பட்டுச் சென்று தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மக்கள் மத்தியில் வேரூன்ற ஆரம்பித்தது. அக்காலத்தில் தமிழ் இனத்தில் அடிமைத்தனத்தை அனுமதித்து வாழ்ந்தவர்களும் சட்டை செய்யாதவர்களுமான ஒரு பகுதியினரும், அடிமைத்தனத்தை அணுவளவும் அனுமதியாத போர்க்குணம் கொண்ட மற்றோர் பகுதியினருமாக தமிழ்ச் சமுதாயம் இரண்டு பட்டிருந்தது. தலைவர்கள் இந்தப் போர்க்குணம் மிக்க பகுதியினரில் சிலரைத் தேர்ந்தெடுத்த நாம் எதற்காக ஆயுதம் ஏந்த வேண்டும் என்ற தத்துவார்த்த அடித்தளத்தை இட்டனர். இதுவே தமிழினத்துக்கான இராணுவத்தின் கருவாக அமைந்தது. இக்கருவானது தொடர்ந்து வந்த அரசியல் நெருக்கடிகளில் அடிபட்டு, நெரிபட்டு, பல நூறுபேரைக் கொண்ட கட்டுக்கோப்பான இராணுவ அமைப்பாக திரட்சியுற்றது. இன்று இதனுள்ளே ஏறத்தாழ நானாவித ராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வல்ல பயிற்றப்பட்ட போராளிகள் இருப்பதோடு இதன் அரசியல் அமைப்பானது இராணுவ அமைப்பிற்கு சமாந்தரமாக தமிழ் ஈழத்தில் பரவலாக்கப்பட்டும் செல்கிறது!

## இந்தியாவை அச்சுறுத்தும் திரிகோணமலை!

**எண்ணம் ஆசிரியர்:-** TELO இயக்கத்திற்கும் சந்திரகாசனுக்குமிடையேயுள்ள உறவு என்ன?

**செயலதிபர்:-** சந்திரகாசன் TELO இயக்கத்தை சார்ந்தவர் அல்ல. அவர் வேறு ஒரு அரசியல் கட்சியைச் சார்ந்தவர். அவர் TELO இயக்கத்திற்கு கடந்த காலங்களில் சில உதவிகளைச் செய்துள்ளார்.

**தமிழ் முரசு ஆசிரியர்:-** திரிகோணமலைத் துறைமுகத்தில் அமெரிக்க இராணுவத் தளம் அமையவிருப்பது தமிழீழப் போராட்டத்தைக் கட்டுப்படுத்தவா?

**செயலதிபர்:-** இது தமிழீழ போராட்டத்துக்கு மாத்திரமன்றி இந்திய உபகண்டதுத்துக்கும் அச்சுறுத்தலாகும். "கஸ்பர்வைன் பேக்கர்" அண்மையில் இலங்கைக்கு திடீர் விஜயம் செய்ததும், அமெரிக்க யுத்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சென்றதும், பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் திருகோணமலைத் துறைமுகத்தைப் பார்வையிட்டதும்— பிரித்தானியாவினால் உலக யுத்தங்களில் பாவிக்கப்பட்ட எண்ணைக் குதங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு வாடகைக்கு விடப்பட்டதும், அரசியல் பிரக்ஞை பூர்வமாக செயற்படுபவர்களால் ஓர் ஏகாதிபத்திய சதியின் முன்னேற்பாடுகளாகவே கணிக்கப்படக் கூடியது. இந்தியாவின் தொழிற்துறை வளர்ச்சியானது உலக ஏகாதிபத்திய நாடுகளுக்கு சந்தை நெருக்கடியை ஏற்படுத்தி அவற்றை பொருளாதாரப் பொழிவுக்கு இட்டுச் செல்வதனால் இந்தியாவை மீண்டும் காலனியாதிக்கம் செய்ய வேண்டிய சதியும் இதில் அடங்கியுள்ளது.

## யதார்த்தமான தமிழ் ஈழம் அமைய!

**எண்ணம் ஆசிரியர்:-** ஐரோப்பாவில் (இருக்கும்) வாழும் தமிழ் மக்கள் என்ன ரீதியில் பங்கு செலுத்த வேண்டும் என TELO எதிர்பார்க்கிறது.

**செயலதிபர்:-** தமிழ் மக்களின் அறிவு ஜீவுப்பகுதியினரில் பெரும்பான்மையோர் ஐரோப்பாவிலேயே வாழ்கிறார்கள். தமிழீழ போராட்டத்துக்கான அகவயத் தேவைகளை இவர்களாலேயே ஈடு செய்ய முடியும். விடுதலைக்கு தேவையான புறநிலைக் காரணிகளை தமிழ் மக்கள் அறிந்து கொள்வதற்கான அறிதிறனை உயர்த்துவதற்கு இவர்களின் பங்கே இன்றியமையாததாகும். ஐரோப்பிய நிதி மூலதனத்தின் சதிகளையும் இங்கிருந்து தீட்டப்படும் இராணுவ அரசியல் சதிகளையும தமிழ் மக்களிடம் கொண்டு வருவதற்காக ஐரோப்பிய முற்போக்குச் சக்திகளினுள் செயற்படுவது முதற்கொண்டு தமிழ் மக்களுக்கு மேலான ஒடுக்கு முறையை பாலஸ்தின, எல்சல்வடோர் போராட்டங்களுடன் சேர்ந்து சர்வதேச சமூக சக்திகளுடன் ஆத்மீகப் பிணைப்பை ஏற்படுத்துவதற்கான கலந்துரையாடல்களையும் அரசியல் தலையீடுகளைச் செய்யவும் ஐரோப்பிய தமிழர்களின் பங்கு இன்றி அமையாததாகும். குறிப்பாக தமிழீழ தேசிய இனத்தை சர்வதேச சமூகத்தில் இருந்து U. N. P. யின் சேறடிப்புகளாலும் ஏகாதிபத்தியத்தின் சதிகளாலும் தனிமைப்படுத்த விடாது தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாக்கவும் வலுவூட்டவும் வேண்டி எமது போராட்டத்தை சர்வதேச சமூகத்திடம கரைப்பது என்ற ஒத்திப் போட முடியாத கடமையை TELO வின் நேச சக்திகள் ஏற்றுச் செயற்பட வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் TELO விற்கு அரசியல் உணர்மையுள்ள நேச ஸ்தாபனங்கள் இல்லையெனில் தமிழீழ விடுதலைக்கான வெகுஜன இயக்கத்தை கட்டி வளர்ப்பது எஞ்ஞான்றும் சாத்தியமாகாது. இந் நேச சக்திகளின் பொருளாதார சமத்துவப் பங்களிப்புகள் இல்லையெனின் தமிழ் ஈழம் ஒருபோதும் யதார்த்தமாகாது.

## விடுதலைப் போரில் தமிழ் முரசு - எண்ணம் ஏடுகள்!

**தமிழ் முரசு ஆசிரியர்:-** எங்கள் பேரவை (பிரான்ஸ்) பற்றியும் "தமிழ் முரசு" பற்றியும் உங்களது அபிப்பிராயம் என்ன?

**செயலதிபர்-** தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்) யின் அதிகமான செயற்பாடுகளை நாம் தமிழ் முரசு மூலமே கிரகித்தோம். தமிழ் முரசு தற்காலத்தில் தோன்றிய அரசியல் பிரச்சார இலக்கியங்களில் ஓர் சிறந்த பத்திரிகையாகும். அதில் காலத்துக்கு காலம் வரும் செய்திகளும், கருத்துக்களும், தமிழ் மக்களை அரசியல் துயிலில் அமிழ விடாது விடுதலைப் பதாகையை உயர்த்திப்பிடித்துள்ளது. அவ் வெளியீட்டாளர்களதும், பங்காளர்களதும் விடுதலைப் பங்கானது, இலைமறை காயாக தோன்றினாலும் வரலாற்றினால் அங்கீகரிக்கப்பட்டே தீரும். தமிழ் முரசை ஓர் உணர்மை பூர்வமானதும், பிரக்ஞை பூர்வமானதுமான பத்திரிகையாக வளர்த்தெடுப்பதனாலேயே தமிழ்ப் போராட்டத்துக்கு உரமூட்டலாம். TELO வை தமிழ் சமூகத்திலிருந்து தனிமைப்படவிடாமலும் பொய்ப் பிரச்சாரங்களில் இருந்தும் சேறடிப்புகளில் இருந்தும் காப்பாற்றி வந்தமைக்கு TELO வும் தமிழ் மக்களும் தங்களுக்கு கடமைப் பாடுடையவர்களாகவே இருப்பார்கள். தமிழீழ விடுதலைப் பேரவை (பிரான்ஸ்) க்கு TELO வின் புரட்சிகர வாழ்த்துகள், உரியதாகும்.



**எண்ணம் ஆசிரியர் :-** தமிழிழ சர்வதேச சம்பந்தக்குழு பற்றியும் எண்ணம் ஏட்டைப் பற்றியும் உங்கள் அபிப்பிராயம் என்ன?

**செயலதிபர் :-** தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்துக்கு ஓர் இறுக்கமான சர்வதேச சம்பந்தம் இன்றியமையாதது என்ற பிரச்சனையை தமிழ் சமூகத்திற்கு அறிமுகம் செய்த பெரும்பங்கு தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழுவையே சாரும். எண்ணம் ஏடானது TELO வை தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்த காரணிகளில் குறிப்பிடக்கூடியதாகும். எண்ணத்தினது பொருளாதார ஆய்வுகளும், அரசியல் மதிப்பீடுகளும், அரசாங்கத்தின் ஒடுக்குமுறைகளையும். விடுதலை இயக்கங்களின் செயற்பாடுகளையும் தமிழ் மக்கள் அறிவதற்கு, துணை நிற்கிறது எண்ணம் ஏட்டை தமிழ் மக்கள் வளர்ப்பார்களாக. தமிழீழ சர்வதேச சம்பந்தக் குழுவிற்கு TELO வின் புரட்சிகர வாழ்த்துக்கள் உரியதாகுக ★

---

- 0 விடுதலை மரம் கொடுங்கோலர்களால் குருதி நீர் பாய்ச்சப்படும் போதே வளருகின்றது. —பெர்ட்ரண்ட் பெரி
- 0 தன்னுணர்வு கொள்ளாத மனிதன் இவ்வுலகில் வாழும் தகுதியே இல்லாதவன் —இக்பால்—
- 0 மதம் மக்களைப் பாகுபடுத்தவும், பிறரிடத்தில் வெறுப்புக் காட்டவும் கற்பிக்கிறது —தாகூர்
- 0 'விதி' என்பது ஒடுக்கப்பட்டவர்கள், மிதிக்கப்பட்டவர்கள் கொதித்து எழாதிருக்க செய்யப்பட்ட 'சதி' —யாரோ
- 0 புரட்சிகள் எந்த நாளும் பின்னோக்கிச் செல்வதில்லை —எமர்சன்
- 0 அறிவு வளர்ப்பது மாத்திரமல்ல கல்வி, அது உள்ளத்தையும்; உடலையும் வளர்க்க வேண்டும் —பகவன்
- 0 எதிர்ப்பு எங்கு இல்லையோ அங்கு வெற்றி இல்லை —பெர்னாட்ஷா
- 0 குற்றங்களுக்காக தனி மனிதனை தண்டிக்கக் கூடாது. குற்றங்களின் சமூக, விரோத பிறப்பிடங்கள் அழிக்கப்பட வேண்டும் —கார்ல் மார்க்ஸ்

# எமது போராட்டம்!


சிங்கள தரகு முதலாளித்துவ வாதிகள் தமது அச்சுறுத்தும் நடவடிக்கைகளை வெறித்தனமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் முன்பு தனித்தனியே இயங்கிக் கொண்டிருந்த தமிழீழப் புரட்சிக்குரிய இயக்கங்களான ரெலோ, ஈரோஸ், ஈ.பி. ஆர் எல். எஃப், ஆகியவை ஒரே கொள்கை நோக்கில் பொது வேலைத்திட்டத்தின் கீழ் நமது தமிழ் மக்கள் அனைவரையும் புரட்சியில் வழிநடத்தும் நோக்குடன் இணைப்பு முயற்சிக்கு உட்பட்டு இணைந்து இப்போது பணியாற்றுகின்றன.

எமது இயக்கம் இன விடுதலையை தொடர்ந்து, தொடர்ச்சியாக வர்க்க விடுதலையை முன்னெடுக்கும் நோக்குடையது. ஒடுக்கப்பட்டு சுரண்டப்பட்ட அனைத்து மக்களுக்காகவும் போராடும் பொருட்டு விடுதலைப் புரட்சியை தலைமையேற்று நடாத்துவதற்கு இந்த இயக்கம் முன்னிற்கும். எமது போராட்டமானது.

- ★ தமிழீழத்தை முழுமையான சுதந்திர நாடாக்குவது;
- ★ உழைக்கும் மக்களைக் கொண்ட அரசை உருவாக்குவது;
- ★ முதலாளிகளுக்கு சொந்தமான வங்கிகளையும், பிற நிறுவனங்களையும் பறிமுதல் செய்து அவற்றை தொழிலாள. விவசாய, அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவது;
- ★ மக்கள் அனைவரும் மீண்டும் சுதந்திரமாக வாழ வழி வகுப்பது;
- ★ தொழிற் கல்வி முறையை செயலாக்குவது;
- ★ சாதிப் பிரச்சனை, சீதனப்பிரச்சனை, மதவேறுபாடுகளால் ஏற்படும் பிரச்சனை, போன்ற சமுதாயத்தில் காணப்படும் இன்னோரன்ன கொடுமைகளை; பொருளாதார ஏற்றத்தாழ்வற்ற சோஷலிஸ சமூகம் ஒன்றை தமிழீழத்தில் உருவாக்குவதன் மூலம் நீக்கல்;

போன்றவற்றை தமிழீழப் பூமியில் நிறைவேற்றுவதே எமது போராட்டம்.

# எமது நோக்கு!



''எமது நோக்கு மிக விசாலமானது. ஆபிரிக்கக் கண்டம் என்றால் என்ன, லத்தீன் அமெரிக்க நாடு என்றால் என்ன, எங்கெங்கு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காகப் போராடும் நோக்கத்தையும் உள்ளடக்கியது. அப்படியிருக்கையில் நமது சக தேசத்தவரான மக்களின், குறிப்பாக சிங்கள மக்களின் நலன் அதற்குள் அடங்காது எப்படிப் போகும்''.

பாசிச நீதிமன்றத்தில்,

தலைவர் **தங்கத்துரை.**